# இஸ்லாமியப் பார்வைக்குள் படைப்பிலக்கியம்

அஷ்ஷைக் எம்.ஏ.ஹபீழ் ஸலபி,ரியாதி (M.A)

*தொடர் - 12*

**சத்தியத்தை ஏற்க மறுப்போரை கால்நடைகளுக்கு ஒப்பிடுதல்:**

ஜின்களிலும் மனிதர்களிலும் நரகத்திற்காகவே பலரைப் படைத்துள்ளோம். அவர்களுக்கு உள்ளங்கள் உள்ளன. அவற்றின் மூலம் அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அவர்களுக்குக் கண்கள் உள்ளன. அவற்றின் மூலம் அவர்கள் பார்ப்பதில்லை. அவர்களுக்குக் காதுகள் உள்ளன. அவற்றின் மூலம் அவர்கள் கேட்பதில்லை. அவர்கள் கால்நடைகளைப் போன்றோர். இல்லை! அதை விடவும் வழி கெட்டவர்கள். அவர்களே அலட்சியம் செய்தவர்கள். (7:179)

**தவறான கொள்கையில் இருப்பவன் ஆற்றோரத்தில் கட்டும் கட்டடம்:**

அல்லாஹ்வைப் பற்றிய அச்சத்தின் மீதும் அவனது திருப்தியின் மீதும் தனது கட்டடத்தை நிர்மாணித்தவன் சிறந்தவனா? அல்லது அரிக்கப்பட்டு விழுந்து விடும் கட்டடத்தை கரை ஓரத்தில் கட்டி அதனுடன் நரகத்தில் சரிந்து விழுந்து விட்டவன் சிறந்தவனா? அநீதி இழைத்த கூட்டத்திற்கு அல்லாஹ் நேர் வழி காட்ட மாட்டான். (9:109)

**அல்லாஹ்வை விடுத்து மற்றவர்களைப் பிரார்த்திப்பவர்களுக்கு உதாரணம்:**

உண்மையான பிரார்த்தனை அவனுக்கே உரியது. அவனன்றி இவர்கள் யாரைப் பிரார்த்திக்கிறார்களோ அவர்கள் சிறிதளவும் இவர்களுக்குப் பதிலளிக்க மாட்டார்கள். தண்ணீர் (தானாக) வாய்க்குள் செல்ல வேண்டும் என்பதற்காக இரு கைகளையும் அதை நோக்கி விரித்து வைத்துக் கொள்பவனைப் போலவே அவர்கள் உள்ளனர். அது (தானாக) அவனது வாய்க்குள் செல்லாது. (ஏக இறைவனை) மறுப்போரின் பிரார்த்தனை வீணாகவே இருக்கும்.(13:14)

**நிராகரிப்பவர்களின் செயல்களை காற்றால் பரப்பப்பட்ட சாம்பலுக்கு ஒப்பிடுதல்:**

தமது இறைவனை ஏற்க மறுத்தோரின் செயல்களுக்கு உதாரணம் சாம்பலாகும். புயல் வீசும் நாளில் கடுமையான காற்று அதை வீசியடிக்கிறது. அவர்கள் திரட்டிய எதன் மீதும் சக்தி பெற மாட்டார்கள். இதுவே (உண்மையிரிருந்து) தொலைவான வழி கேடாகும். (14:18)

**திடீரென்று அழிந்து போகும் செழிப்பான தோட்டத்திற்கு உலக வாழ்க்கையை ஒப்பிடுதல்:**

இவ்வுலக வாழ்க்கைக்கு உதாரணம் வானிரிருந்து நாம் இறக்கிய தண்ணீரைப் போன்றது. மனிதர்களும் கால்நடைகளும் உண்ணுகிற பூமியின் தாவரங்களுடன் அத்தண்ணீர் கலக்கிறது. முடிவில் பூமி அலங்காரம் பெற்று கவர்ச்சியாக ஆகிறது. அதன் உரிமையாளர்கள் அதன் மீது தமக்குச் சக்தி இருப்பதாக நினைக்கும் போது நமது கட்டளை இரவிலோ பகரிலோ அதற்கு (பூமிக்கு) கிடைக்கிறது. உடனே நேற்று அவ்விடத்தில் இல்லாதிருந்தது போல்

அறுக்கப்பட்டதாக அதை ஆக்கினோம். சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இவ்வாறே சான்றுகளைத் தெளிவுபடுத்துகிறோம். (10:24)

**அசத்தியத்தை நீர்க்குமிழிக்கும் சத்தியத்தை பயனுள்ள பொருளுக்கும் ஒப்பிடுதல்:**

வானத்திலிருந்து அவன் தண்ணீரை இறக்கினான். அது வாய்க்கால்களின் அளவுக்கேற்ப ஓடுகிறது. மிதக்கும் நுரைகளை வெள்ளம் சுமக்கிறது. நகை அல்லது தளவாடம் செய்வதற்காக நெருப்பில் அவர்கள் உருக்குவதிலும் இது போன்ற நுரை ஏற்படுகிறது. இவ்வாறே உண்மைக்கும் பொய்க்கும் அல்லாஹ் உதாரணம் காட்டுகிறான். நுரையோ மறைந்து விடுகின்றது. மனிதர்களுக்குப் பயன் தரக் கூடியதோ நிலத்தில் தங்கி விடுகிறது. அல்லாஹ் இவ்வாறே உதாரணங்களைக் கூறுகிறான். (13:17)

**போலி தெய்வங்களை எதற்கும் இயலாத அடிமைக்கு ஒப்பிடுதல்:**

எதற்கும் சக்தி பெறாத பிறருக்கு உடைமையான அடிமையையும் யாருக்கு நாம் அழகிய செல்வத்தை அளித்தோமோ அவனையும் அல்லாஹ் உதாரணமாகக் காட்டுகிறான். இவன் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் அதிரிருந்து (நல் வழியில்) செலவிடுகிறான். (இவ்விருவரும்) சமமாவார்களா? எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. எனினும் அவர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள். (16:75)

**சத்தியத்தை எடுத்துச் சொல்ல மறுப்பவனை எதற்கும் இயலாத ஊமை அடிமைக்கு ஒப்பிடுதல்:**

இரண்டு மனிதர்களை அல்லாஹ் உதாரணம் காட்டுகிறான். அவர்களில் ஒருவன் ஊமை. எதற்கும் சக்தி பெற மாட்டான். அவன் தனது எஜமானனுக்குப் பாரமாக இருக்கிறான். எங்கே அவனை அனுப்பினாலும் நன்மையைக் கொண்டு வர மாட்டான். இ(த்தகைய)வனும் நேரான வழியில் இருந்து கொண்டு நீதியை ஏவுபவனும் சமமாவார்களா? (16:76)

**சத்தியம் செய்து அதை மீறுபவனை உறுதியாக நூல் நூற்று அதை அறுத்தவனுக்கு ஒப்பிடுதல்:**

உறுதியாக நூற்று பின்னர் நூற்றதைத் துண்டு துண்டாக ஆக்கியவளைப் போல் ஆகாதீர்கள்! ஒரு சமுதாயத்தை விட இன்னொரு சமுதாயம் அதிக எண்ணிக்கையில் உள்ளது என்பதற்காக உங்கள் சத்தியங்களை மோசடியாகப் பயன்படுத்தாதீர்கள்! இதன் மூலம் அல்லாஹ் உங்களைச் சோதிக்கிறான். நீங்கள் முரண்பட்டது பற்றி கியாமத் நாளில்1 அவன் உங்களுக்குத் தெளிவுபடுத்துவான். (16:92)

**அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பவனுக்கு உதாரணம்:**

அல்லாஹ்வுக்கு அர்ப்பணித்து அவனுக்கு இணை கற்பிக்காதோராக (ஆகுங்கள்!) அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பவன் வானத்திரிருந்து விழுந்து பறவைகள் தூக்கிச் சென்றவனைப் போல் அல்லது காற்று தூரமான இடத்தில் கொண்டு போய்ப் போட்டவனைப் போல் ஆவான். (22:31)

**இணை கற்பிப்போருக்கு மற்றொரு உதாரணம்:**

மனிதர்களே! உங்களுக்கு ஓர் உதாரணம் கூறப்படுகிறது. அதைச் செவிதாழ்த்திக் கேளுங்கள்! அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் அனைவரும் ஒன்று திரண்டாலும் ஓர் ஈயைக் கூட படைக்க முடியாது. ஈ அவர்களிடமிருந்து எதையேனும் பறித்துக் கொண்டால் அதை அந்த ஈயிடமிருந்து அவர்களால் மீட்க முடியாது. தேடுவோனும் தேடப்படுவோனும் பலவீனமாக இருக்கிறார்கள்.(22:73)

### நிராகரிப்பவர்களின் செயல்களுக்கு உதாரணம் :

அல்லது ஆழ்கடரில் உள்ள பல இருள்களைப் போன்றது. ஓர் அலை அதை மூடுகிறது. அதற்கு மேலே மற்றொரு அலை! அதன் மேலே மேகம்! ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பல இருள்கள்! அவன் தனது கையை வெளிப்படுத்தும் போது அதை (கூட) அவனால் பார்க்க முடியாது.303 அல்லாஹ் யாருக்கு ஒளியை ஏற்படுத்தவில்லையோ அவனுக்கு எந்த ஒளியும் இல்லை. (24:40)

### இறைவனுக்கு இணை கற்பிப்போரை சிலந்திப் பூச்சிக்கு ஒப்பிடுதல் :

அல்லாஹ்வையன்றி பாதுகாவலர்களை ஏற்படுத்திக் கொண்டோரின் உதாரணம் சிலந்திப் பூச்சியைப் போன்றது. அது ஒரு வீட்டை அமைத்துக் கொண்டது. வீடுகளிலேயே சிலந்தியின் வீடு தான் மிகவும் பலவீனமானது. (அதை) அவர்கள் அறியக் கூடாதா? (29:41)

### கற்றபடி செயல்படாதவர்களை ஏட்டைச் சுமக்கும் கழுதைகளுக்கு ஒப்பிடுதல்:

தவ்ராத் சுமத்தப்பட்டு பின்னர் அதைச் சுமக்காமல் (அதன் படி நடக்காமல்) இருந்தார்களே அவர்களது உதாரணம் ஏடுகளைச் சுமக்கும் கழுதையைப் போன்றது. அல்லாஹ்வின் வசனங்களைப் பொய்யெனக் கருதுவோருக்குரிய உதாரணம் மிகவும் கெட்டது. அநீதி இழைக்கும் கூட்டத்திற்கு அல்லாஹ் நேர் வழி காட்டமாட்டான். (62:5)

இவ்வாறு அல்குர்ஆன் பற்பல அழகிய உதாரணங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வளவு அற்புதமான இலக்கியத்தை விட்டு விட்டு, ஏன் குப்பைகளை நாடிச் செல்கிறீர்கள்? இதில் காணப்படும் ஓர் இலக்கிய நயத்திற்கும் சுவைக்கும் ஈடாக வேறொன்றை உங்களால் காண்பிக்க முடியுமா? முடியாதிருக்க ஏன் இஸ்லாமியப் பெயர்தாங்கிய, அதேவேளை இஸ்லாத்தின் அடிப்படைகளைத் தகர்க்கும் குப்பைகளை நாடிச் செல்கின்றீர்கள்.

அல்குர்ஆன் உயிரோட்டத்துடன் சித்திரித்துக் காட்டும் இப்பிரபஞ்சத்தின் எழில் மயமான காட்சிகள், அந்தக் காட்சிகளின் ஆன்மாக்களோடு, மனித ஆன்மாவையும், அவனது உயிரையும் ஒன்றிவிடச் செய்யும் படியான அழகிய, ஜீவனுள்ள சொல்லாட்சிகள். அந்தக் காட்சிகள் அவன் ஆன்மாவில் சிந்தும் இரகசியங்கள். அவற்றின் பின்னணியில் காணப்படும், அவற்றை ஆட்டிப்படைக்கும் மகத்தான இறையாற்றல் ஆகியவற்றைப் புரிந்து கொண்டதன் பின்னர், அந்த மகத்தான மகோன்னதமான சக்தியை நம்பச் சொல்லித் தூண்டுகிறது. வணங்கி வழிபட அழைப்பு விடுக்கிறது.

*“கவிஞனுடைய அணுகுமுறை உணர்வுப்பூர்வமானது. அறிவுப்பூர்வமானதன்று. அவனது பணி மெய்ப்பித்துக் காட்டுவதன்று. உணரச் செய்வதேயாகும்” என நெய்ல்சன் கூறுகின்றார்.*

நெய்ஸ்ஸனின் கருத்து, இஸ்லாமியக் கவிஞனுக்குப் பொருந்தாது. இஸ்லாம் கூறும் உண்மைகளை மெய்ப்பித்துக் காட்டுவதைப் புறக்கணித்து விட்டு, வெறும் உணர்வுகளுக்கு அடிமைப்பட்டு, மனம் போன போக்கில் இலக்கியம் படைக்க இஸ்லாத்தில் அனுமதி கிடையாது. இஸ்லாம் என்பது உறுதியானதும் நிலையானதுமாகும். அதன் முதன்மை மூலாதாரம் அல்குர்ஆன். அதன் விளக்கவுரை நபி (ஸல்) அவர்களின் பொன் மொழிகள். அது, ‘இஸ்னாது’ எனும் சான்றாதாரங்களின் தூணின் மீது உறுதியாக நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே, இலக்கியத்திற்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை மிகச் சரியாக உணர்ந்து அதன் நெறிமுறைகளுடனும் உன்னத இலக்குடனும் இஸ்லாமிய இலக்கியம் படைக்கப்படல் காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இம்முயற்சிகள் முனைப்புடன், திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதன் மூலம், பிற அந்நிய, ஆபாச இலக்கிய அலைகளின் தாக்கங்களிலிருந்து எமது இளம் சந்ததியினரைப் பாதுகாக்க முடியும்.

இன்று, இளைய தலைமுறையினர் சிறந்த இஸ்லாமிய இலக்கியத்திற்காக ஏங்கியும், இரந்தும் நிற்கின்றனர். அல்குர்ஆனின் அறிவுச் சுனையிலிருந்தும் நபிகளாரின் பொன் மொழிகளிலிருந்தும் அழகொளிரும் இயற்கைக் காட்சிகளிலிருந்தும் இஸ்லாமிய அகீதாவு(கொள்கை)க்கு முரணாகாத இலக்கியங்களை வழங்க இஸ்லாமியக் கற்கைத் துறை சார்ந்தோர் முன்வருவார்களா? முயற்சிப்பார்களா? அந்த எதிர்பார்ப்புடன் நிறைவு செய்கின்றோம்.

*முற்றும்*

## ஊசாத்துணைகள்


1. *செய்யித் குதுப், பீ ழிளாலில் குர்ஆன்*
2. *முஹம்மது குதுப், மின்ஹாஜ் அல்பன்னுல் இஸ்லாமி (1980)*
3. *ஹஸ்ஸான், இஸ்லாத்தை மறந்த இலக்கியங்கள்*
4. *இஸ்லாமிய சிந்தனை*
5. *எம்.எச்.எம்.அஷ்ரஃப், "நான் எனும் நீ"*
6. *தோப்பில் முஹம்மது மீரான், சாய்வு நாற்காலி (1995)*
7. Dr.M.M.*உவைஸ், வழியும் மொழியும் (1991)*
8. *அகிலன், நாம் எங்கே போகிறோம்?*
9. *கவிஞர் கண்ணதாசன், எனது வசந்தகாலங்கள் (1989)*
10. *வைரமுத்து, வில்லோடு வா நிலவே!*
11. *வைரமுத்து, காவி நிறத்தில் ஒரு காதல்*
12. *வைரமுத்து, வானம் தொட்டுவிடும் தூரம்தான்*
13. *பீ. ஜைனுல் ஆபிதீன் , திருக்குர்ஆன் தமிழாக்கம்*
14. *வைரமுத்து, ஒரு போர்க்களமும் இரண்டு பூக்களும்*
15. *வைரமுத்து, மீண்டும் என் தொட்டிலுக்கு*
16. *வைரமுத்து, கேள்விகளால் ஒரு வேள்வி*
17. *அப்துல் ரகுமான், "பசி எந்தச் சாதி?*